
உ
சிவமயம்



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும்
அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட
ஓய்வுபெற்ற புகையிரத நிலையப் பிரதம அதிபர்
அமரர்

# திரு. பொன்னுச்சாமி சுந்தரலிங்கம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

10.09.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# பொன்னுச்சாமி சுந்தரலிங்கம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**10.09.2005**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சமர்ப்பணம்

அன்பினாலும் பண்பினாலும்
உயர்ந்து நின்று
எங்கள் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும்
மெழுகுவர்த்தியாக இருந்து
தன்னையே உருக்கி ஒளியூட்டிய
எங்கள் அன்புத் தெய்வத்தின்
இனிய நினைவுகளை மனதில்
சுமந்து கொண்டு
எமது கண்ணீர்ப்பூக்களை
அவர்களின் பாதக்கமலத்திற்கு
காணிக்கையாக்குகிறோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**குடும்பத்தினர்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தோற்றம்
1920.03.10

மறைவு
2005.08.11

அளவையூர்

# அமரர் சுந்தரலிங்கம் பற்றிய

## திதிவெண்பா

ஆண்டுநல் பார்த்திபவில் ஆடியிரு பத்தைந்தில்
நீண்டுவளர் சட்டி புதன்நாளில் - வேண்டி
அளவைவாழ் சுந்தர லிங்கம் அரன்தாள்
உளமாரச் சென்றடைந்தார் உற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்
# திருவாளர் பொ.சுந்தரலிங்கம் பற்றிய திதிவெண்பா

ஆண்டுநல் பார்த்திபவில் ஆடியிரு பத்தைந்தில்
ஈண்டுபுதன் பூர்வமே சட்டிநாள் - வேண்டி
அளவையூர் சுந்தர லிங்கம் அரன்தாள்
உளமாரச் சென்றடைந்தார் உற்று.

## வாழ்வின் சீர்

(1) வண்ணார்பண் ணையூரை வாழ்பதியாய்க் கொண்டும்
வல்லாசித்தி விநாயகன்றாள் நல்லமுறை தொழுதும்
கண்ணெனவே தமிழுடனே ஆங்கிலம்சை வத்தை
கல்லூரி இந்துவிலே காலூன்றிக் கற்றும்
திண்ணெனவே புகையிரத தானாதி பதியாய்
புகழ்பூத்த உத்தியோகம் புந்தியுறப் பார்த்தும்
அண்ணல்சுந் தரலிங்கம் அமர்ந்திருந்தார் அன்றே
அரியசிவன் திருவடியே அகத்திருத்தி நன்றே.

(2) அந்தநாள் சண்டிலிப்பாய் அவ்வூரிற் பிறந்து
அருங்கல்வி படித்துயர்ந்து அறிவில்மேம் பட்டு
சிந்தனையில் ஈசனையே வந்தனைசெய் திருந்த
திருமகளாய்த் திகழ்ந்த மங்கை இராசம்மா தனையே
பந்தமுறு திருமணத்துக் கேற்றபாவை யென்று
பல்லோருங் கூறக்கேட்ட படிசுந்தர லிங்கம்
எந்தையீசன் தாள்பணிந்து மங்கலநாண் பூட்டி
இனியபுதல் வியரிருவர் ஒருமகனைப் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) பிள்ளைகளை சைவத்தில் தமிழ்ஆங் கிலத்தில்
பிறைபோல வளர்த்துப்படிப் பித்துப்பருவமாக
நல்லஇரு மருகரையும் மாண்புடனே தேர்ந்து
மங்கலநாண் பூட்டுவித்து மணமுடித்தும் வைத்தே
வல்லஇறை யருளிலந்த வாழ்வின்பய னாக
மழலைகளாம் பேர்த்திபேரன் மார்களையுங் கண்டு
தொல்லையின்றி உத்தியோகத் தோய்ந்தளவை தனிலே
சுகமாக அறுபதினிலே தொட்டுத் தொடர்ந் திருந்தார்.

(4) மூத்தவித்தி பெற்றஒரு பூட்டியினைக் கண்டும்
முதியோனாம் வாழ்வினிலே புதியோனா யமர்ந்தும்
சூத்திரமாய் அளவையூர்ப் பிள்ளையார் வீதி
முறையமைந்த வீட்டினிலே உறைந்தசுந் தரரே
பாத்திரமாய் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையப்
பற்றுடனே, திடீரெனவே பற்றுஎல்லாம் மறந்தும்
நேர்த்தியென ஈசனடி நேர்ந்து சாந்தி யுற்றார்
நின்மலனை ஏத்திடுவோம் அன்னார்சாந்தி பெறவே.

ஞானவைரவர் கோவிலடி,
அளவெட்டி.

உறவினர்
முதுபெரும்புலவர், கலாபூஷணம், ஆசிரியர்
**வை.க.சிற்றம்பலம்**

## திருவடிநீழலும், கைலைப்புராணமும்

திருவடி நீழலெனும் சிறந்தமடந் தனிலே
திருவிளக்கை ஏற்றுமொரு பெருவழக்கைக் கொண்டும்
அருள்நால்வர் சந்தானா சாரியரைத் தொழுதும்
அன்பராம் சற்குண சிங்கந்தொண்டு புரிந்தும்
பொருளாக சற்குணத்தார் கைலைப்புரா ணத்தை
புதிப்பித்துப் பதிப்பிக்கப் புந்திவைத்தா ரெனினும்
திருவாளர் மறைந்துவிட்டார் சிந்திப்பார் யாரோ
செய்துநிறை வேற்றிவிட்டால் உய்தியடைவாரே.

சுபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சுந்தரலிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

அமரர் சுந்தரலிங்கம் என்பவர் வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் வக்கீல் பொன்னுச்சாமிக்கும் நாகேஸ்வரி அம்மாவுக்கும் சிரேஷ்ட புதல்வனாக 1920ம் ஆண்டு பங்குனி மாதம் 10ம் திகதி பிறந்தார். இவர் மூத்த பிள்ளையாக இருந்ததால் திரவியம் என்று பெற்றோராலும், உறவினராலும் செல்லமாக அழைக்கப்பட்டார். இவர் ஆதியில் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் முதல் அதிபராக இருந்த Godman அப்பாப்பிள்ளையின் பூட்டனுமாவார். தனது இளவயதில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று, பின்னர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் Mr.Bunker அதிபராக இருந்த காலத்தில் கல்வி பயின்று, London Matriculation பரீட்சையை Latin மொழியுடன் சித்தி பெற்றிருந்தார். பின்னர் 1940 ஆம் ஆண்டில் தனது 20வது வயதில் புகையிரத நிலையத்தில் வேலைக்கு அமர்ந்தார்.

சண்டிலிப்பாயில் வாழ்ந்த மலாயன் பென்ஷனியர் சிதம்பரப்பிள்ளை விசாலாட்சியின் மகள் இராசம்மாவை 1948ம் ஆண்டு சிவயோகசுவாமிகள் சொற்படி அளவெட்டியிலுள்ள திருவடிநிழலில் விவாகம் செய்தார். இவருக்கு இரண்டு பெண்பிள்ளைகளும் ஒரு ஆண்பிள்ளையும் உண்டு.

அநேக புகையிரத நிலையங்களில் புகையிரத நிலைய அதிபராக வேலை பார்த்து இறுதியில் நானுஓயாவில் பிரதம புகையிரத நிலைய அதிபராக இருந்து ஓய்வுபெற்று அளவெட்டியில் தனது இல்லமாகிய பிள்ளையார் வீதியில் இனிது வாழ்ந்து வந்தார். நாட்டில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக 1996ம் ஆண்டு மனைவி யுடன் பல இடங்களுக்கும் இடம்பெயர்ந்து இறுதியில், கொழும்பு சென்று அங்கே வாழ்ந்து வந்தார். பின் 2005ம் ஆண்டு இறுதியில் Mr. & Mrs. Watson என்ற Australian couple ஆல் நடாத்தப்படும் Pleasant Cottage க்கு வந்து pleasant ஆக வாழ்ந்து வந்தார். எப்போதும் சந்தோஷமாக இருக்கும் சுந்தரலிங்கம் ஆடிமாத சஷ்டியில் ஆனந்தமாக சிவபதம் எய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரர்களின் நினைவுகளில்......

*இறைவனடி சேர்ந்த எமது அண்ணர் சுந்தரலிங்கம் அவர்களும் அவரது மனைவியாரும் இறைவன் அடியார்கள். எமது அண்ணர் யோகர்சுவாமிகளின் நற்சிந்தனைகளைப் பாடல்களை விரும்பிக் கேட்டும் படித்தும் வரும் பழக்கம் உள்ளவர். ஆனபடியால் நற்சிந்தனைத் திருநூலில் உள்ள சில அமிர்த வாசகங்களை இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூர்தல் பொருத்தம் என நினைக்கிறோம்.*

ஓம்

சிவமயம்

நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று. நீ ஆத்மா, ஆத்மா ஒருநாளும் அழியாது. இது மகான்களுக்குடைய அனுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக்கடவது. ஆனால், கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதாவது தருமநெறியில் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் முன்னிலை என்று சாதனை செய். கடவுள் உள்ளும் புறமும் உள்ளவர்.

இப்படிக்கு
அவனே நானே

## ஆன்மா நித்தியம்

ஆன்மா நித்தியம் ஆன பொருளென
ஆசான் சொல்லக் கேட்டிருந்தோம்
அதையே மறந்தோம் பிறந்தோம் இனிநாம்
அதுவே நாம் என எண்ணிடுவோம்.

அநுதினம் சாதனை செய்யச் செய்ய
ஆனந்த மான மோட்ச வீட்டை
அடைவோம் இதிலோர் ஐயமும் இல்லை. ஆனால்
அடக்கமும் பொறுமையும் வேண்டுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை யன்பொடு குருவின் பாதத்தைக்
கும்பிடும் பாக்கியம் உண்டானால்
கோடா கோடி பாவத்தைப் போக்கும்
நாட்டத்தைச் சிவத்தில் வைப்போமே.

கௌரியை யிடத்தில் வைத்தவன் பாதம்
கைதொழும் அடியார்கள்
காலனை வென்று ஞாலந் தன்னில்
கவலையை நீங்கி வாழ்வாரே.

**மகேஸ்வரி**
**சகோதரர்கள்: அமிர்தாம்பிகை**
**பாலச்சந்திரன்**

## "குருவாக அமைந்த எனது தந்தை"

பாலர் வகுப்பிலிருந்து உயத்தர வகுப்பு வரை யாழ் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் படிக்க வைத்து, டாக்டர் சுந்தரலிங்கம் விக்கினேந்திரன் எனும் பட்டம் வரை என்னை ஆளாக்கிய எனது தந்தை எனக்குக் குருவாக அமைந்த பேற்றினை இறைவன் நல்லவண்ணம் தந்துள்ளான். "யார் பெறுவார்" எனும் தத்துவத்தை கற்பித்த எனது தந்தையின் ஆத்மா சாந்தியடைவதாக.

**01.09.2005**

**மகன்**
**டாக்டர் சுந்தரலிங்கம் விக்கினேந்திரன்**
**பின்லாந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Some Thoughts and Memories

I have been asked to pay my tribute to my Brother - in - law the late Mr. Suntheralingam in English, instead of in my own language Tamil. It may be because he had his academic education through that medium at Jaffna Hindu College and Jaffna College and excelled both in writing and speaking the English Language with a flair that commanded such high respect among his contemporaries and colleagues. His great grandfather, the late Mr.Godman Appapillai who was one of the earliest heads of the present Jaffna Hindu College, was himself very well versed in that language - a fact he was proud about, and his father, the late proctor Ponnusamy had an admirable competence in English and strove hard to pass that skill to his son. Infact the late Mr.Suntheralingam was more at home in English than in Tamil or Sinhala, in both of which languages he was proficient as well.

The late Mr.Suntheralingam was a very popular story - teller. He used to regale his friends and audience with numerous apposite anecdotes often highly amusing and calling forth bursts of happy laughter. He could also tell them stories relating to the much more serious aspects of life, which were full of wise counsel.

He was one of those who went to the Great Teachers I sought to find the meaning of life, what determined life and the Real power that lies behind life. The gifts of all the great religions of the human race seem to be hope, faith and love. He was always full of hope and deep faith. Once during the early days of his career in the Ceylon Government Railways, before he rose to be Chief Station Master, he had trouble as a Booking Clerk, with a fellow officer who used to filch from his daily passenger ticket collections. He knew what was happening, but he said he hadn't the courage as a young man to stop or deal with the offender. He went to the sage of Columbuthurai, Siva Yoga Swamigal. As was



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the Great Sage's wont, he suddenly turned to him and said "Look here son, this world is for the brave - for the courageous" "துணிஞ்சவனுக்குத்தான் இந்த உலகம் காணும்". The following day when he went to office he kept a watchful eye on his thievish comrade, caught him red - handed, reported him to the higher authorities and got himself free for ever afterwards - got back his peace and daily collections safe. His faith grew as he found his prayers answered. He grew ever more and more trustful in the omni - potence of that Unseen but Undeniable power called God, fondly adored in our hearts in various forms - by him as the Mother Kali.

My late Brother - in - law was a loving husband and a devoted father who tried his utmost to give his children the best of education and make them refined and loved by people. He doted on his grandchildren. All the members of his family are a living testimony to his faith in God and values of life he held dear to his heart.

Salutations to the Holy Mother
Sarwam Sivamayam
Lord Thy Holy Feet are our Only Refuge.

*P.Elankanayagam*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு அப்பாவே.....

எதிர்பாராத சேதி கேட்டு ஏங்கிப் போனோம்
இக் கொடுமையை ஏன் தந்தீர்கள்
எக்காரணத்துக்கும் கடும்சொற்கூட பேசமாட்டீர்கள்
தக்க நேரத்தில் தரம்பிரித்து அறிவூட்டினீர்கள்
தனி வழிபோக விட மாட்டீர்கள் பின்னால் வருவீர்கள்
இனி போதும் படித்தது அதிக நேரம் நித்திரை
முழித்தால் கண்கெட்டுவிடும் என்று
சொல்வீர்கள் எந்நேரமும்
குடும்பத்தின் நலத்தை நினைத்துக்கொண்டிருப்பீர்கள்
கல்வியின் முக்கியத்துவத்தை ஆழமாக கதைகளால்
பதிப்பீர்கள் கல்வியானது இறைக்க ஊறும்
கிணறு போல என்று எல்லாருக்கும்
ஊட்ட வேணும் என்பீர்கள் இலவசமாக
ஊட்டும் பண்பாடு உங்களுக்கு
குறிப்பாக ஆங்கிலத்தில் அப்படி ஒரு
ஆர்வம் உங்களுக்கு
காணமுடியாத கல்விப் பொக்கிஷம் நீங்கள் அப்பா
எங்களுக்கும் எங்கள் பிள்ளைகள் மற்றும்
எல்லா பிள்ளைகளுக்கும் உங்கள் இழப்பு
பேரிழப்பு எத்தனை எத்தனை உதாரணக்
கதைகள் கேட்டோம் இனியார் அதை
நிரப்பப் போகிறார்கள்
குருஅருளை ஊட்டினீர்கள் யோகசுவாமியின்
அருளை அள்ளி அள்ளி தந்தீர்கள்
உங்கள் அப்பா ஒரு Dictionary
தத்துவஞானி என்றெல்லாம்
பலர் சொல்லக் கேட்கும்போது
பெருமைப் பட்டோம்
எங்கள் உயிருள்ளவரை மறவோம் உங்களை
இவ்வளவு நாளும் குருவாக இருந்து வழிகாட்டினீர்கள் இனி
நீங்கள் தெய்வமாக இருந்து எங்களை வழிகாட்ட வேணும்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**சோதி - கணேசரத்தினம் குடும்பம், கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அன்புத் தந்தை பற்றி.....

பொன்னுச்சாமி சுந்தரலிங்கம் அவர்கள் குடும்பத்தில் மூத்த பிள்ளையாக இருந்தபடியால், திரவியம் என்று பெற்றோராலும், உறவினராலும் செல்லமாக அழைக்கப்பட்டார். கடைசிவரை செல்லமாகவே வாழ்ந்தார். அறிவுள்ள நூல்களை வாசிப்பதிலும், அதை மற்றவர்களுக்குப் போதிப்பதிலும் அவருக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. அளவெட்டியில் அமைந்துள்ள திருவடிநிழல் என்ற சுவாமி சற்குணசிங்கம் வீற்றிருந்த மடத்தில் அமைதியாக தியானத்தில் ஆழ்ந்திருப்பதில் அவருக்கு விருப்பம். தனது தாய் மாமனை திடீரென இழந்த கவலையைத் தீர்ப்பதற்காக 18 வயதிலேயே சுவாமி சற்குணசிங்கத்தைச் சந்தித்தார். அதிலிருந்து அவருடைய தொடர்பு வளர்ந்துகொண்டிருந்தது. கடைசி காலம் கொழும்பில் இருந்த காலத்தில் யோகர் சுவாமிகளின் குருபூசை களில் தவறாது பங்குபற்றுவார். எந்த நேரமும் சந்தோஷமாக இருக்கும். சுபாவம் உள்ளவர். பிள்ளைகளுக்குச் சமயப்பற்று உண்டாக்குவதற்காக அடிக்கடி கூப்பிட்டு புராணக்கதைகளைத் தகுந்த உதாரணத்தோடு மனதில் பதியுமாறு போதித்தார். ஆங்கில அறிவு நிறைய உண்டு. பாடசாலையில் ஆங்கில மொழியில் அவருடைய பேச்சு என்றால் மாணவர்கள் அதைக் கேட்பதற்கு ஆர்வத்துடன் மண்டபம் நிறைய கூடியிருப்பார்கள். கடைசி காலத்தில் நிதானத்துடன் முறையாக அம்மாவுக்குத் தேவையான அலுவல்களை தானே முடித்திருந்தார். தனது இறுதி காலம் என்பதை அறிந்ததும் தீவிர கடவுள் வழிபாட்டில் உறுதியாகவே இருந்தார். அவரின் பிரார்த்தனைக்கமைய நிறைவோடு இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மதி - வேலுப்பிள்ளை குடும்பம்**

**பிரான்ஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனரின் இரங்கல்

நான் கொழும்பு வரும்போதெல்லாம் அவரிடம் சென்று ஆறுதலாக பல மணிநேரம் பேசுவது வழக்கம். அவரிடம் அறிவுரைகள், விளக்கங்கள், வில்லங்கமான நேரங்களில் அதற்கு விடைகள் பற்றி ஆலோசிப்பதில் எல்லாம் ஒரு கல்லூரி மாணவன் கல்வி பயில்வது மட்டுமல்லாமல் வாழ்க்கை முறைபற்றி பயிலுதல் போன்றது அந்த அனுபவம். ஆங்கிலம், தமிழ்மொழிகளில் பரந்த அறிவு செறிவான கருத்துக்கள் மூலம் விளக்கம் கொடுக்கும் விதம் ஆன்மீக விளக்கங்கள் அற்புதம். தன்னடக்கம் தனிச்சிறப்பு அவரிடம். அவர் இருப்பிடம் செல்லும்பொழுதெல்லாம் கதவு திறந்து அன்புடன் அழைத்து அமர்த்தி இல்லாளிடம் "இங்கே பாரும் யார் வந்திருப்பது" என்று முகமலர்ந்து வந்து அழைப் பதைப் பார்த்து ஒரு புன்னகை செய்யும் வதனம் இனிப்பார்ப்பதற் கில்லை. எனக்கும் அந்தவகையில் பேரிழப்புதான். உபசரித்து உணவு பரிமாற, பின் விடைபெறும்பொழுது படலை மட்டும் வந்து அனுப்பும் பக்குவம் இன்று எத்தனை பேரிடம் உண்டு. அத்தனை பண்பு அவரிடம் இருந்தது.

சொந்த மண்ணின் சுகம்தான் என்னே என்று நீங்கள் இருவரும் யாழ் திரும்பி இணுவில் இல்லத்தில் இளைப்பாறி ஈற்றில் தானே அமைத்த இல்லத்தில் மருவிவந்த மகன் தன் கையால் காரியம் சிறப்பாக உற்றார், உறவினர் மத்தியில் இறுதி யாத்திரை அமைந்தது பற்றி அறிந்ததும் சிறிது ஆறுதல்.

கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா? கணேசு! உங்களுக்கு அளவையூர் தந்த அதிசய வைரக்கல். முகஞ் சுழியாது முன்னின்று ஓடோடிவந்து ஒற்றுமை காத்து அத்தனையும் ஆற்றிவைத்தது நீங்கள் செய்த புண்ணியம்.

பிறப்புண்டேல் இறப்பு நிச்சயம் இது இரண்டிற்கும் இடையே தான் எம் வாழ்வு. நாம் செய்யும் நல்லது, கெட்டது தான் வரவு செலவுக் கணக்கு. நீங்கள் இருவரும் இல்லறம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிதே நடத்தி நல்லறம் செய்துவிட்டீர்கள். அவர் நன்றே சிவபதம் அடைந்துவிட்டார். கவலை விடுங்கள். உங்கள் சுகத்தைப் பேணி அமைதிகாக்கவும், மகள் சோதி சிலகாலம் தங்கி ஆறுதலாக வரவும் உங்கள் எல்லோர்க்கும் எங்கள் கண்ணீர் அஞ்சலி.

"எப்பவோ முடிந்த காரியம் நாம் ஒன்றும் அறியோம்"
வணக்கம்.

**379, KNOLLWOOD ROAD EXT.**
**ELMSFORD**
**NEW YORK 10523**
**U.S.A**
**AUGUST, 18, 2005**

**மைத்துனர்**
**சி.இராசரத்தினம்**

**ஒரு பொல்லாப்பும் இல்லை**
**எப்பவோ முடிந்த காரியம்**
**முழுதும் உண்மை**
**யாம் அறியோம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைலைப்புராணம்

திருச்சிற்றம்பலம்

## திருவடி நீழல் பதிகம்

கங்கையு மரவுந் தோன்றும்
கதிர் எறி சடையுந்தோன்றும்
மங்கையோர் பாகந் தோன்றும்
வடிவெலாம் பவளந் தோன்றும்
கொங்கலர் கொன்றை மாலை
குளிர்நிலா வெறிக்குஞ் செய்ய
திங்கள் நீண் முடிமேற்றோன்றும்
திருவடி நீழலார்க்கே. 1

நெந்நிமே லொருகண் தோன்றும்
நிகரிலா வழகுந் தோன்றும்
கற்றைவார் சடையுந் தோன்றும்
கதிர் நிலா மதியந்தோன்றும்
முற்றுமா தவருக் காக
முன்னைநாட் புரங்கள் மூன்றும்
செற்றதோர் அனலுந் தோன்றும்
திருவடி நீழலார்க்கே. 2

நீறுலா மேனி தோன்றும்
நெடிய வோர் சூலந்தோன்றும்
ஆறுலாஞ் சடையின் மீது
அருளெனும் பிரபை தோன்றும்
ஏறுலாம் வடிவுந் தோன்றும்
இதயமும் களிக்க வன்பர்
தேறு மோருவுந் தோன்றும்
திருவடி நீழலார்க்கே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதனில் நெருப்புத் தோன்றும்
கரியுரிப் போர்வை தோன்றும்
மையணி கண்டந் தோன்றும்
மான்மழுக் கரத்திற் றோன்றும்
மெய்தனிற் புலித் தோலாடை
விளங்கிடு பிரபை தோன்றுஞ்
செய்யவோர் மாதுந் தோன்றும்
திருவடி நீழலார்க்கே. 4

நான்முகன் சிரசைக் கிள்ளி
நானெனு மகந்தை தீர்த்து
வானவர் தம்மைக் காத்து
வரமருள் கருணை தோன்றும்
மான்விழி நோக்கிக் காண
மன்றினு ளாடுஞ் செய்ய
தேன்மலர்ப் பாதந் தோன்றுந்
திருவடி நீழலார்க்கே. 5

அரியயன் பெருமை கொண்டே
அமர்புரிந் திடுமந் நாளில்
எரிதழற் பிழம்பாய் நின்ற
எல்லையி லுருவுந் தோன்றும்
விரிவுறு மறைக ளெல்லாம்
மிகமுயன் றின்னுங் காணாத்
திருவருள் வடிவுந் தோன்றும்
திருவடி நீழலார்க்கே. 6

கையினிற் கபால மேந்திக்
கழுகொடு காட்டி லாடி
மெய்தனிற் சாம்ப ரென்பு
விளங்கு மோருருவுந் தோன்றும்
உய்நெறி யுணர்த்த வேண்டி
யோக மாநிலையிலுற்ற
தெய்வ நல்வடிவுந் தோன்றும்
திருவடி நீழலார்க்கே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தி நிபாத மென்னும்
தனிநிலை தோன்றுந் தோன்றும்
முத்தியின் முடிவு காட்டும்
மூவிலைச் சூலந் தோன்றும்
பித்தனென் றொருபேர் தோன்றும்
பேயுடன் காட்டில் வாழும்
சித்தென மாடல் தோன்றுந்
திருவடி நீழலார்க்கே. 8

கரிமுகக் கடவு ளாகக்
காட்டிய கருணை தோன்றும்
விரிவுறு முகமோ ராறாய்
விளங்கிய காட்சி தோன்றும்
புரிகுழல் உமையோர் பாகம்
பொருந்திய வடிவுந் தோன்றும்
திரிபுரத் தீயுந் தோன்றுந்
திருவடி நீழலார்க்கே. 9

தாருகா வனத்திற் செய்த
தனிநடந் தோன்றுந் தோன்றும்
மேருவாஞ் சிலை வளைத்த
விறன்மிகு புயமுந் தோன்றும்
பாரெலாம் பரவிப் போற்றும்
பாதமுந் தோன்றும் தோன்றும்
சீரெலா முரு வெடுத்த
திருவடி நீழலார்க்கே. 10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FEW OF HIS COLLECTIONS

1. THE TONGUE IS SIX INCHES LONG
IT CAN KILL A MAN SIX FEET TALL.
CHINESE PROVERB

2. NEVER BE THE FIRST TO TRY A NEW REMEDY NOR BE THE LAST TO GIVE UP AN OLD ONE.

3. YOU CAN NEVER PLAN THE FUTURE BY THE PAST.

4. WE ARE ALWAYS GETTING READY TO
LIVE BUT NEVER LIVING.
RALPH WALDO EMERSON

5. IT TAKES 21 YEARS FOR A WOMAN TO MAKE A MAN OF HER SON, IT TAKES 21 MINUTES FOR ANOTHER WOMAN TO MAKE AN ASS OF HIM.

6. MORE CRUEL THAN A SERPENTS TOOTH IS A THANKLESS CHILD.
KING LEAR SHAKESPEARE

7. ONCE DRINKING DEEP OF THAT DIVINEST ANGUISH HOW COULD I SEEK THE EMPTY WORLD AGAIN.
EMILY BRONTE

8. A SWEET WORD HERE
A KIND ACT THERE
AND YOU WILL KNOW
WHAT HEAVEN IS ON EARTH

9. DO NOT TROUBLE TROUBLE UNTIL TROUBLE TROUBLES YOU.
ANON

10. DO NOT GO HALF WAY TO MEET DIFFICULTIES
YOGAR SWAMY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. GOD IS A CIRCLE WHOSE CENTRE IS EVERY WHERE AND WHOSE CIRCUMFERENCE IS NO WHERE.

EMPREDOCLES

12. BIRTH IS AN ACCIDENT
LIFE IS AN ADVENTURE
MARRIAGE IS A MISTAKE
DEATH IS A CERTAINITY.

ANON

13. LIVE AS IF YOU ARE GOING TO
DIE TOMORROW.
STUDY AS IF YOU ARE GOING TO
LIVE FOR EVER.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்திரு யோகர் சுவாமிகள் பாடிய

# நற்சிந்தனைப் பாடல்

இராகம்: சிந்துபைரவி இராகம்: ஆதி

**பல்லவி**

நல்லூரைக் கும்பிட்டுநீ பாடு அதனாலே
நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்

**அநுபல்லவி**

செல்லாதே வெறுங்கையாய் செல்லப்பன் வாழ்ந்தநாடு
தேங்காயுடன் பழம் கொண்டு நீ செல்லு


**சரணம்**

வாடி உன்மனம் ஓடினாலும் வருத்தங்கள் கோடி
கோடியாகக் கூடினாலும் குறைகள் வந்து
தேடி உன்னை மூடினாலும் செல்லப்பன் பாதம்
சிந்தித்தால் ஓடிஓடிப்போமே
பெண்டு பிள்ளைகளென்று பேதைமை கொண்டு நீ
கண்டகண்ட இடம் கலங்கி நீ திரியாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வம்சவிருட்சம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்



எங்கள் குடும்பத் தலைவர் **அமரர் பொன்னுச்சாமி சுந்தரலிங்கம்** அவர்கள் காலமாகிய செய்தியறிந்து உடன் வந்து உதவியவர்களுக்கும், Pleasant Cottage Director Mrs.Ann Watson மற்றும் Staff and Residents ஆகியோர்க்கும் அன்னாரின் இறுதிச் சடங்கிலும், இறுதி ஊர்வலத்திலும் பங்குகொண்டு எம்துயர் பகிர்ந்தவர்களுக்கும் தங்கள் அனுதாபத்தை தொலைபேசி வாயிலாகவும், கடிதம் மூலமும் வெளிப்படுத்தியோர்களுக்கும், இன்று நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்டவர்களுக்கும் இப்புத்தகத்தை அழகுற அச்சிட்டுத் தந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கும்பழாவளைப் பிள்ளையார் வீதி,**
**கேணிக்கரை, அளவெட்டி.**
08.09.2005

இங்ஙனம்
**குடும்பத்தினர்**

Sri Saji Offset Printers - Thavady. Tel: 021 222 3527

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ரமணர் அருளமுதம்

பிறப்பும் இறப்பும் வாழ்க்கையின் எல்லைகள். இந்த இரண்டையும் கடந்து நிற்பது ஆன்மா. அதை உணர்ந்தால் இந்த இரண்டும் பொருளற்றதாகிவிடும்.

தன்னை உணர்ந்த மனிதன் இந்த நிலையைக் கடந்து விடுகிறான். இறப்பு அவனைப் பாதிப்பதில்லை. இந்த வாழ்க்கையில் அவன் செய்த காரியங்கள் ஏற்படுத்தும் உணர்வுகளும் வாசனைகளும் ஆத்மாவின் பயணத்தைத் தொடர்கின்றன. இதனால் ஏற்படும் வேதனை தரும் பாதிப்பையே நரகம் என்றும் நல்ல காரியங்கள் ஏற்படுத்தும் இனிமையான பாதிப்பையே சுவர்க்கம் என்றும் சொல்லுகிறோம். இதை ஒட்டியே அவனுடைய அடுத்த பிறவியும் ஏற்படுகிறது.

ஒரு மனிதன் தனது வாழ்க்கையில் தேடிக்கொள்ளும் நற்பயணங்கள் அதிகமாக இருந்தால், அதை ஒட்டி அவனுக்கு மரணத்துக்குப் பின் இனிய அனுபவம் ஏற்படுகிறது. கெட்ட பலன்கள் அதிகமாக இருந்தால் துன்பம் நிறைந்த அனுபவம் உண்டாகிறது. இந்த அடிப்படையிலேயே அவனுக்கு மறுபிறவியும் ஏற்படுகிறது. வேறுவிதமாகவும் அமைகிறது. ஆத்மா தொடர்ந்தும் அனுபவிக்கும் அனுபவங்களே சுவர்க்கம், நரகம், மறுபிறவி எல்லாம் ஆகும். இதை உணர்ந்து கொண்டால் நாம் பிறப்புக்கும் இறப்புக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org